தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

22.04.2013 A.M

## விவசாயிகள் விஞ்ஞானிகளாக மாறுவது அவசியம்: எம்.எஸ். சுவாமிநாதன் வலியுறுத்தல்



ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியாக மாற வேண்டும் என்றார் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன்.

தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை அருகேயுள்ள பசுபதி கோவில் கிராமத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பண்ணைப் பள்ளித் தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது:

பருவ மழை குறைவு, காவிரி நீர் பிரச்னை போன்றவற்றால் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையில் விவசாயிகள் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்தப் பண்ணைப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் இல்லாதபோது என்னென்ன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கலாம் குறைந்த அளவில் கிடைக்கும் தண்ணீரை எப்படி பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்வது நில வளத்தை மேம்படுத்தும் முறை, அதற்காக என்ன செய்வது உள்ளிட்டவை தொடர்பாக விவசாயிகள் கருத்துப் பரிமாறிக் கொள்ள இந்தப் பள்ளி உதவியாக இருக்கும். இதன் மூலம், விவசாயி கடந்த காலத்தில் தண்ணீர் இல்லாதபோது வெற்றிகரமாகச் சாகுபடி மேற்கொண்டதை மற்ற விவசாயிகளுக்குத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும்.

இதுபோல ஒரு விவசாயி மற்ற விவசாயியிடம் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது தொழில்நுட்பத் தகவல் விரைவாகவும், எளிதாகவும் சென்றடையும்.

புவி வெப்பமயமாதல் காரணமாக பருவ நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச்சூழ்நிலையில் தண்ணீர் வருமா மழை பெய்யுமா என்பன போன்ற சந்தேகங்கள் விவசாயிகளிடையே எழும். தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது சொட்டு நீர் பாசனம் செய்யும் முறையைப் பின்பற்ற வேண்டும். ஒரு சொட்டுத் தண்ணீரில் அதிக அளவில் மகசூல் பெறலாம்.

இப்போது கிராமவாசிகள் அனுபவ ரீதியான கல்வியாளர்களாக இருக்கின்றனர்.

விவசாயிகள் களத்தில் இறங்கி வேலை செய்வதால், ஆய்வகத்தில் பணியாற்றுபவர்களைவிட அவர்களுக்கு அனுபவம் அதிகமாக இருக்கிறது. மேலும், ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியாக மாற வேண்டும்.

விவசாயிகள், விஞ்ஞானிகள், வங்கியாளர்கள், வியாபாரிகள், அரசு அலுவலர்கள் ஆகிய 5 பேரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நாடு முன்னேற்றமடையும்.

மனிதனுக்கு உணவும், அறிவும் இரு கால்கள் போன்றவை. உணவு உற்பத்தி செய்ய வங்கிகள் உதவி செய்ய முன்வர வேண்டும்.

80 சதவீத விவசாயிகள் சிறு விவசாயிகளாக உள்ளனர். விவசாயத்தில் கிடைக்கக்கூடிய வருவாய் மூலம்தான் விவசாயிகள் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பது உள்ளிட்ட செலவுகளை மேற்கொள்கின்றனர். எனவே, விவசாயிகளின் கஷ்டத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பொது விநியோகத் திட்டத்தில் அரிசி, கோதுமையைப் போல கம்பு, கேழ்வரகு, சாமை, திணை போன்ற சிறு தானியங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இதுபோன்ற சிறு தானியங்களை சாகுபடி செய்ய விவசாயிகள் முன் வர வேண்டும் என்றார் சுவாமிநாதன்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவன நிர்வாக இயக்குநர் அஜய் பரிடா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல முதன்மை மேலாளர் எஸ். ரகுவத்ஸசாரி, முன்னோடி விவசாயி கலைவாணி ராஜேந்திரன் உள்ளிட்டோர் பேசினர்.

## தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க கோரிக்கை

தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று மதச்சார்பற்ற ஜனதாதளம் வலியுறுத்தியுள்ளது.

மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் மேற்கு மண்டல மாநாடு கோவையில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நீலகிரி பச்சைத் தேயிலைக்கு கிலோவுக்கு ரூ. 20 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ. 3 ஆயிரம் வழங்க வேண்டும். விசைத்தறி, விவசாயம் மற்றும் சிறுதொழில்களை அழிக்கும் மின்வெட்டுப் பிரச்னைக்கு முடிவுகட்ட வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். பொள்ளாச்சியில் கயிறு வாரியம் அமைக்க வேண்டும். விசைத்தறிக் கூடங்களுக்கு மின்கட்டணத்தை 30 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் நீலலோகிததாசன், மாநிலத் தலைவர் முகமது இஸ்மாயில், மாநிலச் செயலாளர் துரைசாமி, கோவை புறநகர் மாவட்டத் தலைவர் காளப்பட்டி பொன்னுசாமி, மாநகர் மாவட்டத் தலைவர் அசோக்குமார், மாவட்டச் செயலாளர் அமீர்பாஷா ஆகியோர் இதில் பங்கேற்றனர். நீலகிரி, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் இதில் கலந்துகொண்டனர்.

## அரசின் திட்டங்கள் மறுப்பு: ஆட்சியரிடம் விவசாயி புகார்

தேர்தல் பிரச்னை காரணமாக அரசின் திட்டங்கள் மறுக்கப்படுவதாக கடலூர் விவசாயத் தொழிலாளி ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே அத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் சக்திவேல் (39). விவசாயத் தொழிலாளி. இவர் மனைவி பிரேமாவுடன் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அதிகாரிகளிடம் சனிக்கிழமை அளித்த மனு விவரம்: தேர்தல் முன்விரோதம் காரணமாக எங்கள் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் இலவச பொருள்கள் வழங்குவது மறுக்கப்பட்டு விட்டது.

அதுபோல் தானே வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அரசின் விதிமுறைப்படி கட்டி அதற்கான பில் தொகை ரூ. 38 ஆயிரம் பெற முடியாமல் அத்திபட்டி ஊராட்சி மன்றத்தால் கையெழுத்து மறுக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக ஆட்சியர் விசாரணை நடத்தி அரசு திட்டங்களைத் தடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு திட்டங்கள் மற்றவர்களுக்கு கிடைப்பது போல் எங்களுக்கும் கிடைக்க செய்ய வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் பொருள்கள்

காஞ்சிபுரம் அருகே நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு வேளாண் பொருள்கள் வழங்கப்பட்டன.

காஞ்சிபுரம் அருகே வையாவூரில் சனிக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது. சட்டப்பேரவை உறுப்பினர் வி. சோமசுந்தரம் தலைமை வகித்தார். இதில் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருள்கள், வேளாண் இடுபொருள்கள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன. மேலும் திருந்திய நெல் சாகுபடி, எள், கரும்பு உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறை அதிகாரிகள் விளக்கமளித்தனர். தோட்டப்பயிர், கால்நடை பராமரிப்பு குறித்தும் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி குறித்த கையேடுகளும் வழங்கப்பட்டன.

வேளாண் உதவி இயக்குனர் முருகன், கால்நடை மருத்துவர் பாக்கியலட்சுமி, உதவி வேளாண் அலுவலர் மாதவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## படமாத்தூரில் உழவர் பெருவிழா

படமாத்தூர் ஊராட்சியில் உழவர் பெருவிழா ஊராட்சித் தலைவர் அ. இருளாண்டி தலைமையில் நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் ஆர்.தனபாலன் செய்திருந்தார். உதவி இயக்குநர் பி.ராமகிருஷ்ணன், பொறியாளர் எஸ்.பாஸ்கரன், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர், சக்தி சர்க்கரை ஆலை பொது மேலாளர், புதுவாழ்வுத்திட்ட அணித் தலைவர் சுந்தரமூர்த்தி, படமாத்தூர் கால்நடை மருத்துவர் ஆகியோர் கலந்துகொண்டு அவரவர் துறை மூலம் அளிக்கப்படும் உதவிகள் மற்றும் சலுகைகள் குறித்து விளக்கினர்.

விழாவில் பயனாளிகளுக்கு மானிய விலையில் மினி டிராக்டர், விசை தெளிப்பான் மற்றும் உழவர் கையேடுகளையும் ஊராட்சித் தலைவர் இருளாண்டி வழங்கினார். சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## ரூ.1.49 கோடியில் உழவர் மையம் அமைக்க பூமிபூஜை

அருப்புக்கோட்டையில் உழவர் மையம் ரூ. 1.49 கோடியில் புதிதாக அமைக்க பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் வைகைச்செல்வன் ஞாயிற்றுக்கிழமை பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார்.

அருப்புக்கோட்டையில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் ரூ. 1.49 கோடியில் உழவர் மையம் அமைப்பதற்கு கடந்தாண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து பூமிபூஜை செய்து, பணிகள் விரைவில் நடைபெற இருக்கிறது. இதில், வேளாண் துறை அலுவலகம், உர,விதை சேமிப்பு கிடங்கு, விதை பரிசோதனைக் கூடம், உழவர்கள் காத்திருப்போர் அறை, இணையதள தானியங்கி பணம் வழங்கும் இயந்திர அறை ஆகியவை தரை தளத்தில் அமைய இருக்கிறது. அதையடுத்து, முதல் தளத்தில் தோட்டக்கலைத்துறை அலுவலகம், உரச் சேமிப்பு கிடங்கு, விதை ஆய்வு சான்றுகள் வழங்கும் அறை, பதிவுகள் வைப்பறைகள் மற்றும் கூட்டரங்கம் ஆகியவைகளுடன் அமைய இருக்கிறது. நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் குணசேகரன், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் யோகவாசுதேவன், வேளாண்மை உதவி இயக்குநர் மோகன் செப்மியான், செயற்பொறியாளர் (கட்டட பிரிவு) தினகரன், உதவி செயற்பொறியாளர் சீத்தாராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை : ஆட்சியர்

ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஆட்சியர் க. நந்தகுமார் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுலலக ஊராட்சி மன்றக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்து ஆட்சியர் க. நந்தகுமார் பேசியதாவது:

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்து பயிர் ஈட்டுறுதித் திட்டம் மூலம் இழப்பீட்டுத் தொகை பெறவும், வறட்சி காரணமாக நிவாரணம் பெறுவது குறித்தும் அரசுக்கு ஏற்கெனவே அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மற்றும் அரசின் உத்தரவு பெறப்பட்டதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்ணைக்குட்டைகள் தேவை குறித்து விவசாயிகளிடம் விண்ணப்பம் பெற அனைத்து வேளாண் உதவி இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அரசு மானியத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க தாட்கோ மூலம் மகளிருக்கு மட்டுமே மானியத்துடன் கூடிய ஆழ்குழாய் கிணறு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மனுதாரர் மனைவி பெயரில் நிலம் இருப்பின் ட்ற்றல்ஹல்ல்ப்ண்ஞ்ஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஞ்ர்.ஞ்ர்ம் என்ற இணையதளத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் நலனுக்காகவும், உற்பத்தியைப் பல மடங்கு அதிகரிக்கவும் அனைத்து கிராமங்களிலும் உழவர் பெருவிழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதில் விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பம் மற்றும் இதர நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகிறது. எனவே உழவர் பெருவிழாவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்.

உத்தரகோசமங்கை, நல்லிருக்கை ஆகிய பகுதிகளில் வேளாண் நிலங்கள் பாதிக்காமல் இருக்க காட்டு மாடுகளை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டமாக இருப்பதாலும், விவசாயிகளின் நலன் கருதி முன்னுரிமை அடிப்படையில் உடனுக்குடன் விவசாயிகளின் கோரிக்கைகள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஆட்சியர் க. நந்தகுமார் கூறினார்.

கூட்டத்தில் அனைத்துத் துறை அதிகாரிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கமுதி பகுதியில் உழவர் பெரு விழா

முதி அருகே கள்ளிக்குளம், மேலராமநதி ஆகிய ஊர்களில் உழவர் பெரு விழா நடைபெற்றது.

கமுதி உதவிக் கோட்ட வேளாண் உதவி இயக்குநர் எம். சக்கரவர்த்தி வரவேற்றார். இந்த விழாக்களில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட வேளாண் துணை இயக்குநர்கள் சுப்பிரமணியன் (மத்திய திட்டம்), அறிவரசன் (மாநிலத் திட்டம்), உதவி இயக்குநர்கள் ஆறுமுகம் (தோட்டக்கலை), மோகன் (விதைச் சான்று) ஆகியோர் பங்கேற்றனர்.

விழாக்களில் பருத்தி சாகுபடி, மண் பரிசோதனை, விதை, உரம் நேர்த்தி உள்ளிட்ட நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு துணை வேளாண் அலுவலர் பா. சேதுராம், உதவி வேளாண் அலுவலர்கள் முத்துப்பிரியா, முனியாண்டி, பழனிவேல் ராஜன்,

சின்னச்சாமி, தோட்டக்கலை உதவி அலுவலர் பழனிச்சாமி உள்ளிட்டோர்  செயல் விளக்கங்கள் அளித்தனர். துணை அலுவலர் சேதுராம் நன்றி கூறினார்.

### தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க கோரிக்கை

தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று மதச்சார்பற்ற ஜனதாதளம் வலியுறுத்தியுள்ளது.

மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் மேற்கு மண்டல மாநாடு கோவையில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நீலகிரி பச்சைத் தேயிலைக்கு கிலோவுக்கு ரூ. 20 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ. 3 ஆயிரம் வழங்க வேண்டும். விசைத்தறி, விவசாயம் மற்றும் சிறுதொழில்களை அழிக்கும் மின்வெட்டுப் பிரச்னைக்கு முடிவுகட்ட வேண்டும்.

கோவை நகரில் உக்கடம், மேட்டுப்பாளையம் சாலை, அவிநாசி சாலை, காந்திபுரம் உள்ளிட்ட இடங்களில் மேம்பாலப் பணிகளை விரைவில் துவங்க வேண்டும். அவிநாசி- அத்திக்கடவு திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும். நஞ்சுண்டாபுரத்தில் பாதாளச் சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதை ரத்து செய்ய வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். பொள்ளாச்சியில் கயிறு வாரியம் அமைக்க வேண்டும். விசைத்தறிக் கூடங்களுக்கு மின்கட்டணத்தை 30 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் நீலலோகிததாசன், மாநிலத் தலைவர் முகமது இஸ்மாயில், மாநிலச் செயலாளர் துரைசாமி, கோவை புறநகர் மாவட்டத் தலைவர் காளப்பட்டி பொன்னுசாமி, மாநகர் மாவட்டத் தலைவர் அசோக்குமார், மாவட்டச் செயலாளர் அமீர்பாஷா ஆகியோர் இதில் பங்கேற்றனர். நீலகிரி, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் இதில் கலந்துகொண்டனர்.

### "மானியத்தை பெற முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும்'

அரசின் மானியத்தை பெற விவசாயிகள் முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும் என்று சென்னை வேளாண்மை துறை துணை இயக்குநர் ஞானஒளி கூறினார்.

செய்யாறு வட்டம் முக்கூர் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் பங்கேற்ற அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். விழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை தாங்கினார்.

விதைச் சான்று உதவி இயக்குநர் மதி.பேபிபர்வதம், பொறியியல் துறை ரவி ஆகியோர் வேளாண் துறை திட்டங்கள் குறித்து விளக்கினர்.

விழாவில் விவசாயிகளுக்கு மணிலா கிட், கை தெளிப்பான், நேரடி நெல் விதைப்பு கருவி மற்றும் இடுபொருள்களும், தோட்டக்கலைத் துறை சார்பில் மானிய விலையில் காய்கறி விதைகள் மற்றும் கன்றுகளை வழங்கினர்.

வேளாண்மை அலுவலர் ஆர்.செந்தமிழ்ச்செல்வன், தோட்டக்கலை துறை உதவி அலுவலர்கள் சத்யா, மணி, ஞானசேகரன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

திரும்பூண்டி: அனக்காவூர் வட்டாரத்தை சேர்ந்த திரும்பூண்டி கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் பாளையம்மன் முன்னிலை வகித்தார். சென்னை வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.சக்கரவர்த்தி தலைமை தாங்கினார்.

துணை வேளாண்மை இயக்குநர் ஞானஒளி, பாரம்பரிய இயற்கை உணவுப் பொருள்கள் குறித்த கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ஏழுமலை, விதைச் சான்றுத் துறை உதவி இயக்குநர் பேபிபர்வதம், விதை ஆய்வு அலுவலர் எ.ஏழமலை, சர்க்கரை ஆலை முதன்மை கரும்பு அலுவலர் கோவிந்தராஜ், கால்நடை மருத்துவர் கார்த்திக், தோட்டக்கலை துறை உதவி அலுவலர் பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சேனியநல்லூர்: வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த சேனியநல்லூர் கிராமத்தில் நடைபெற்ற விழாவில் உதவி வேளாண்மை இயக்குநர் கோ.பாண்டியன் வரவேற்றார். ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயசித்ரா முன்னிலை வகித்தார். திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரா.சக்கரவர்த்தி தலைமை தாங்கினார்.

செங்கம்

செங்கத்தை அடுத்த கண்ணக்கருக்கை, பீமானந்தல் ஆகிய கிராமங்களுக்கான உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கண்ணக்குருக்கை ஊராட்சி மன்றத் தலைவர் திருப்பதி தலைமை வகித்தார். அதிமுக தலைமைக் கழகப் பேச்சாளர் அமுதா அருணாசலம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் மாரியப்பன் வரவேற்றார். வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் சந்திரசேகரன், வீரமணி ஆகியோர் வேளாண் துறை திட்டங்கள் குறித்து பேசினர்.

வேளாண்மை துறை துணை அலுவர் ஜெயசீலன், தோட்டக்கலைத் துறை அலுவலர் பாலமுருகன், வேளாண்மை வணிகத் துறை சர்தார், தருமலிங்கம், ராஜமாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### ஏப். 26-ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஏப். 26-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்

கரன் மேலும் தெரிவித்திருப்பது:

இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

மேலும், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப் பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம்.

இதில், கருத்துகளை தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை ஏப். 26-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.72 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 24.72 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 115 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு

485 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## சிறு தானியங்கள் சாகுபடி செய்ய வேளாண்துறை வலியுறுத்தல்

விவசாயிகள் பல ஆண்டுகளுக்கு முன் செய்து வந்த சிறு தானியங்கள் சாகுபடியை தற்போது மீண்டும் தொடங்க வேண்டும் என வேளாண் துறை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து, பட்டுக்கோட்டை அருகே ராஜாமடம் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் ஆர். மோகன் பேசியது:

சோளம், மக்காச்சோளம், வரகு, கம்பு, கேழ்வரகு ஆகியவை சிறு தானியங்கள் ஆகும். திணை, சாமை, குதிரை வாலி போன்றவை மிகச் சிறு தானிய வகைகளைச் சேர்ந்தவை. குறைந்த நீரில் இவற்றை சாகுபடி செய்து 110 முதல் 130 நாள்களில் அறுவடை செய்யலாம்.

பட்டுக்கோட்டை பகுதியில் சுமார் 5,423 ஹெக்டேர் பரப்பு நிலங்கள் மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்யும் தரிசு நிலங்களாக உள்ளன. 30 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் சுமார் 3000 ஏக்கரில் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன. ஆனால் தற்போது தனி நபரின் பொருள் வாங்கும் திறன் அதிகரிப்பு, நகரமயமாதல் அதிகரிப்பு, அரிசி சார்ந்த உணவுப் பொருள்களில் நுகர்வோர் காட்டும் அதிக ஈடுபாடு போன்ற காரணங்களால் இப்பகுதியில் சிறு தானியங்கள் சாகுபடி வெகுவாக குறைந்து விட்டது.

எனவே, இனி வரும் காலங்களில் உணவுத் தேவையை சமாளிப்பதற்கு நாம் அரிசியை அடிப்படையாகக் கொண்ட உணவு வகைகளை மட்டும் சார்ந்திருக்க முடியாது. இந்தச் சூழலில் மாற்றுப் பயிராக சிறு தானியங்களைப் பயிரிடலாம்.

சிறு தானியத்தில் செய்யப்படும் திணை இட்லி, சோளப் பணியாரம், கேழ்வரகு தோசை, கம்பு அடை, வரகு புளியோதரை, குதிரை வாலி பொங்கல் போன்றவை ருசியாக இருப்பதுடன் இவற்றில் அதிக அளவில் தாதுப் பொருள்கள், உயிர்ச்சத்து, நார்ச்சத்து போன்றவை அடங்கியிருப்பதால் சர்க்கரை நோயாளிகளுக்கான சிறந்த உணவாக மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் இவற்றை உண்பதால் இதயம் சார்ந்த நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது.

எனவே ராஜாமடம் பகுதி விவசாயிகள் தங்களுடைய தரிசு நிலத்தில் வரும் ஆடி பட்டத்தில் சிறு தானிய வகைகளைப் பயிரிட்டு பயனடையலாம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.04.2013 A.M**

---

## காலி இடத்தில் காய்கறித் தோட்டம் வேளாண் துணை இயக்குனர் தகவல்

நாமக்கல்: "வீட்டில் காலியாக உள்ள இடங்களில், வீட்டுக்கழிவு நீரைப் பயன்படுத்தி காய்கறிகளை உற்பத்தி செய்து, அதன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:வீடுகளில் உள்ள காலியான இடங்களில், வீட்டுக்கழிவு நீரைப் பயன்படுத்தி, காய்கறிகளை உற்பத்தி செய்வதால், காய்கறிகளின் பற்றாக்குறையை, ஓரளவுக்கு நிவர்த்தி செய்வதுடன், நம்மால் விளைவிக்கப்பட்ட பொருட்களை, நாமே உபயோகிக்கின்றோம் என்ற மனமகிழ்ச்சி ஏற்படும்.குடும்பத்துக்கு தேவையான பசுமை நிறைந்த காய்கள், பழங்கள், பூ வகைகள் மற்றும் சில மருந்து வகைகளும் வளர்த்துக் கொள்ளலாம். காய்கள், பழங்கள் உடனடியாக கிடைக்கும். வீட்டுப்புறத்தை சுத்தமாகவும், அழகாகவும் வைக்க உதவுகிறது. நமக்கு பிடித்த காய்கள், பழவகைகளும் கிடைக்கிறது.அதன் மூலம், வீட்டில் இருந்து வெளியேறும் பயனற்ற நீரினை பயனுள்ள நீராக மாற்ற, வீட்டுக்காய்கறித் தோட்டம் உதவுகிறது. ஆண், பெண் இருபாலரும் தோட்ட வேலை செய்வதால், நல்ல உடற்பயிற்சி மட்டுமல்லாமல், ஆரோக்கியமான, சுகாதாரமான, இனிமையான, பயனுள்ள பொழுது போக்காகவும் அமைகிறது.அதேபோல், நம் குடும்பத்தில் உள்ள சிறு குழந்தைகள், காய்கறி, பழ வகைகள், பூ வகைகளைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பும், அதில் ஆர்வமும் ஏற்பட ஏதுவாகிறது. வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க, வீட்டின் பின்புறம், இடதுபுறம், வலப்புறம் காலியிடங்களை தேர்வு செய்யலாம்.அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இடம் சதுரமாகவும், செவ்வகமாகவும் இருந்தால் நல்லது. தேர்வு செய்த இடங்களை ஓரம் ஒதுக்கி, சின்ன சின்ன பாத்திகளாக பிரித்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக நடைபாதை அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த நடைபாதையின் மேல் பந்தல் அமைத்து, கொடி வகைக் காய்கறிகளை வளர்க்கலாம்.காய்கறித் தோட்டத்தின் ஏதாவது ஒரு மூலையில் காய்ந்த இலை, தழை போடுவதற்கு குழி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். விரைவாக வளர்ந்து பயன் தரும் பழமரங்களான பப்பாளி, வாழை, எலுமிச்சை, மாதுளை போன்ற வகைகளை வடக்குபுறமாக

வளர்ப்பதால், அதனுடைய நிழலால் மற்ற பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவது தவிர்க்கப்படும்.காய்கறித் தோட்டத்தை சுற்றி வேலி அமைத்து, அதில் படரும் கொடிவகை காய்கறிப் பயிர்களான பாகல், கோவைப்பழம், பீர்க்கை போன்ற காய்கறிகளை வளர்க்கலாம். ஓரம் மற்றும் உட்பகுதியின் உயரப்பாத்திகளில் வேர் காய்கறிகளான மரவள்ளிக்கிழங்கு, கேரட், முள்ளங்கி, டர்னிப், பீட்ரூட் போன்றவைகளை பயிர் செய்யலாம்.

இது குறித்து மேலும் விளக்கம் பெற, தங்கள் வருவாய் கிராமத்தில் நடக்கும் உழவர் பெருவிழாவில் பங்கேற்று, விளக்கம் பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உழவர் பெருவிழா

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் யூனியனுக்கு உட்பட்ட புதுப்பாளையம் பஞ்சாயத்தில், வேளாண் துறையின் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது.பஞ்சாயத்து தலைவர் ரவி தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் அசோக் முன்னிலை வகித்தார். யூனியன் சேர்மன் செந்தில் பங்கேற்று, விழாவை துவக்கி வைத்து பேசினார். தோட்டக்கலை, பட்டு வளர்ச்சி, வேளாண் பொறியியல், விதை சான்று உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலம், செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், புதிய தொழில் நுட்பங்கள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.அதேபோல், அரசின் திட்டத்தை பயன்படுத்தி விவசாயிகள் வருவாய் பெருக்குவதற்கான வழிமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 150க்கும் மேற்பட்ட விவசாயிகள், அரசு அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பழ வகை, பூச்செடிகள் உற்பத்தியில்... சதனை கருமந்துறை அரசு பழப்பண்ணை முதலிடம்

பெத்தநாயக்கன்பாளையம்: பெத்தநாயக்கன்பாளையம் அருகே கருமந்துறை உள்ள அரசு பழப்பண்ணை, பழ வகை மற்றும் பூச்செடி உற்பத்தியில், ஆசியா அளவில், இரண்டாவது இடமும், தமிழக அளவில், முதலிடமும் பிடித்து சாதனை படைத்துள்ளது.தமிழக தோட்டக்கலை, வேளாண்துறை மூலம், 54 பழப் பண்ணை, பலன் தரும் பழ வகை, மலர் செடிகள் வளர்ப்பு பண்ணைகள் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம், ஆத்தூர் அடுத்த கல்வராயன்மலையில் உள்ள கருமந்துறையில், 1,036 ஏக்கர் பரப்பளவில், தோட்டக் கலைத்துறையின் பழப்பண்ணை உள்ளது.இங்கு, மா, கொய்யா, கோ-கோ, பலா, பாக்கு, மிளகு, கிராம்பூ, சப்போட்டா உள்ளிட்ட பழ வகை, ரோஜா, குண்டு மல்லிகை மலர் ரக வீரிய ரகம் மற்றும் ஒட்டு ரக செடிகள் வளர்த்து வருகின்றனர். இதில், மா, கொய்யா, பலா வீரிய ரக செடிகள், சேலம், கோவை, விழுப்புரம்,

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, ஈரோடு, நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களுக்கு சப்ளை செய்கின்றனர்.கருமந்துறை பழப்பண்ணையில் மட்டும், ஆண்டுக்கு, பத்து லட்சத்துக்கு மேல் பழம், பூ வகை செடிகள் வளர்க்கப்பட்டு, தோட்டக்கலை துறை மூலம் மானிய விலைக்கு வழங்குகின்றனர். மேலும், சேலம் மாவட்ட தோட்டக்கலைத்துறையில், ஆத்தூர் முல்லைவாடி, மணியார்குண்டம், கருமந்துறை, ஏற்காடு, சிறுமலை என, ஆறு இடங்களில் பழவகை விதைகள் மூலம், வீரிய ரகம், ஒட்டு ரக செடிகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்குகின்றனர்.கருமந்துறை அரசு பழப்பண்ணையில், அதிகளவில் பழ வகை, பூ செடிகள் உற்பத்தி செய்து, 75 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளனர். அதனால், ஆசியா அளவில் கருமந்துறை பழப்பண்ணை, இரண்டாம் இடமும், தமிழக அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.இதுகுறித்து, கருமந்துறை பழப்பண்ணை அலுவலர்கள் கூறியதாவது:கருமந்துறை அரசு பழப்பண்ணையில், பழ வகை நாற்று செடிகளும், பூ வகை வீரிய ரக ஒட்டு செடிகளும் உற்பத்தி செய்யப்படுகிறது.மத்திய பாக்கு ஆராய்ச்சி நிலையத்தின் மூலம், மங்களா, ஸ்ரீமங்களா, சுப மங்களா, முகித்மெகன் போன்ற வீரிய ரக பாக்கு நாற்றுகள் வளர்க்கப்படுகிறது. அதேபோல், பலா செடிகளில், பன்னியூர், கரிமுண்டா, சிங்கப்பூர், வேலி, பர்லியா போன்ற வீரிய ரக பலா செடிகள் உள்ளன. இவ்வகை பலா செடிகள், மூன்று முதல், ஐந்து ஆண்டுகளில் காய்கள் பிடிப்பதுடன், அதிக அளவில் விளைச்சல் இருக்கும்.தவிர, மிளகு, கோ-கோ போன்ற செடிகளும், வீரிய ரகம், ஒட்டு ரகம் உற்பத்தி செய்து, மானிய விலையிலும், அரசின் இலவச திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது. கருமந்துறை பழப்பண்ணை, பழ வகை மற்றும் பூ வகை நாற்றுக்கள் உற்பத்தியில், கடந்த ஆண்டு தேசிய அளவில், இரண்டாவது இடம் பிடித்து சாதனை புரிந்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நவீன யுக்தியை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்: அமைச்சர்

இடைப்பாடி: ""விவசாயத்தில், நவீன யுக்திகளை பயன்படுத்தி, அதிக மகசூல் பெற, விவசாயிகளுக்கு, தமிழக அரசு பல்வேறு நன்மைகளை செய்து வருகிறது," என, இடைப்பாடியில் நடந்த உழவர் பெருவிழாவில், அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசினார்.இடைப்பாடி தாலுகா, வெள்ளிரிவெள்ளி பகுதியில், நேற்று, உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது. டி.ஆர்.ஓ., செல்வராஜ் தலைமை வகித்தார். வேளாண்துறை இணை இயக்குனர் சுந்தர் வரவேற்றார்.விழாவில் கலந்து கொண்டு அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசியதாவது:தமிழகத்தில், இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்தவே, உழவர் பெருவிழா

கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில், மற்ற துறைகளை காட்டிலும், விவசாயத் துறைக்கு தான், அதிகளவில் நிதி ஒதுக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் உழைக்கும் உழைப்பிற்கு தகுந்த மகசூல் கிடைப்பதில்லை. ஆனால், பக்கத்து மாநிலத்தில், நம்மை காட்டிலும், அதிகளவில் மகசூல் பெற்று வருகின்றனர்.அதனை கருத்தில் கொண்டுதான், நவீன விவசாயத்துக்கு மாறவேண்டும் என்ற நோக்கத்தில், வேளாண்துறை மூலம் புதிய யுக்தி மூலம் எவ்வாறு விவசாயம் செய்ய வேண்டும் என, விவசாயிகளுக்கு கற்றுத்தரப்படுகிறது.இதனை, விவசாயிகள் நன்கு கேட்டறிந்து, புதிய முறையில் விவசாயம் செய்து, அதிக மகசூல் பெற வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.எம்.பி., செம்மலை, கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட இணைப்பதிவாளர் லட்சுமி, இடைப்பாடி ஒன்றிய சேர்மன் மாதேஸ், நகராட்சி சேர்மன் கதிரேசன், மாவட்ட கவுன்சிலர் மாதேஸ்வரன், ஒன்றிய கவுன்சிலர்கள் அசோக், ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### குண்டு மல்லிகை பூ வரத்து அதிகரிப்பு

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், குண்டு மல்லிகை பூக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதால், கிலோ, 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதனால், பூக்கடைகளில், 100 கிராம் பூ வாங்கினால், 100 கிராம் பூ இலவசமாக வழங்கினர்.ஆத்தூர் பகுதியில், நரசிங்கபுரம், தலைவாசல், மணிவிழுந்தான், காட்டுக்கோட்டை, வீரகனூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், கெங்கவல்லி, தம்மம்பட்டி, மல்லியக்கரை, கீரிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், குண்டு மல்லிகை, சன்ன மல்லிகை, சாமந்தி, கோழிக் கொண்டை, சம்மங்கி போன்ற பூக்கள் சாகுபடி செய்கின்றனர்.ஏப்ரல் மாதத்தில், குண்டு மல்லிகை, சன்ன மல்லிகை, அரும்பு மல்லிகை பூக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதனால், ஆத்தூர் பூக்கடைகளுக்கு, குண்டு மல்லிகை, அரும்பு மல்லிகை பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால், கிலோ, 70 முதல், 80 ரூபாய் வரை விற்பனையானது.
அதனால், பூக்கடைகளில், 100 கிராம் குண்டு மல்லிகை பூவுக்கு, 100 கிராம் பூவும், அரும்பு மல்லிகை, 100 கிராமிற்கு, 50 கிராம் பூவும் இலவசமாக வழங்கினர்.

### தோட்டக்கலை துறை சலுகை திட்டங்கள் பெற விவசாயிகளுக்கு துணை இயக்குனர் அழைப்பு

தியாகதுருகம் : தோட்டக்கலைத்துறை மூலம் அரசு வழங்கும் மானிய திட்டங்களை பெற்று விவசாயிகள் பயனடைய வேண்டும் என்று தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராசு அறிவித்துள்ளார். விழுப்புரம் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: மாவட்டத்தில் காய்கறி, மலர் பழமரம் சாகுபடியில் விவசாயிகள் பலர் ஆர்வமுடன்

ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் பழமர கன்றுகள், காய்கறி விதைகள், மலர் செடிகள் 100 சதவீத மானியத்துடன் இடுபொருள்கள் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் காய்கறி வகைகள், பழக்கன்றுகளுக்கு 50 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 6,250 ரூபாய் மதிப்பு கொண்ட உரம், நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் காய்கறி விதை, கைத்தெளிப்பான், ரசாயனஉரங்கள், திசுவாழை கன்றுகள் 100 சதவீதம் மானியத்துடன் வழங்கப்படுகிறது. தேசிய மூங்கில் இயக்கத்தின் கீழ் மூங்கில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கன்றுகள் மற்றும் ஏக்கருக்கு 1,666 ரூபாயும், பராமரிப்பு செலவாக ஆண்டுதோறும் 1,666 ரூபாய் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. தேசிய மூலிகை பயிர் இயக்கத்தின் சார்பில் கோலியாஸ், குளோரியோசா மூலிகை செடிகளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 3,583 ரூபாய் முதல் 25 ஆயிரத்து 833 ரூபாய் வரை மானியம் அளிக்கப்படுகிறது. நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 43 ஆயிரத்து 816 ரூபாய் மதிப்புள்ள சொட்டுநீர் பாசன கருவிகள் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் அளிக்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறை மூலம் அரசு வழங்கும் சலுகைகளை விவசாயிகள் பெற்று பயனடைய அருகில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு தெரிவித்துள்ளார்.

**சூறாவளியால் மாம்பழ மகசூல்..பாதிப்பு:நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

சூறாவளி மற்றும் ஆலங்கட்டி மழையால், 1,000 ஏக்கர் பரப்பளவிலான, மாந்@தாப்புகளில், பிஞ்”கள் உதிர்ந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி ஒன்றியத்தில், 490 ஏக்கர், பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், 330 ஏக்கர், ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில், 180 ஏக்கர் என, மொத்தம் 1,000 ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன.இவற்றில், பேனிஷா, காலாபானி, பெங்களூரா, செந்தூரா, ருமானி, அல்போன்சா, பங்கனபள்ளி, நீலம், மல்கோவா உள்ளிட்ட பல்வேறு வகையான மாங்கனிகள் பயிரிடப்பட்டு உள்ளன.

**கிலோ 7 ரூபாய்:** பெரும்பாலான இடங்களில், தற்போது மாங்கனி சீசன் துவங்கியுள்ளது. திருத்தணி பகுதியில் பருவம் கடந்து பெய்த மழையால், தற்போது தான் மா மரங்களில் பிஞ்சுகள்

விட்டுள்ளன.இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (ஏப்., 19ம் தேதி) மாலை, பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி வட்டங்களில் சூறாவளி காற்று வீசியது.

அதை தொடர்ந்து, ஆலங்கட்டி மழை பெய்தது. மாலை, 6:00 மணி முதல் இரவு, 8:00 மணி வரை கொட்டித்தீர்த்த மழையால், மாந்தோப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மா மரங்களில் இருந்த பிஞ்சுகள் உதிர்ந்து விழுந்தன. பல இடங்களில் கிளைகளும் முறிந்தன.இன்னும் ஒரு மாதத்தில் முழு வளர்ச்சி அடைந்து மாங்கனிகளாக அறுவடை செய்யப்பட வேண்டிய மா பிஞ்சுகள், சூறாவளி காற்றால் தோப்புகளில் சிதறிக் கிடக்கின்றன.

கடந்த ஆண்டு, 1 கிலோ மாங்கனி, 40 முதல் 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, உதிர்ந்த பிஞ்சுகள் அதிகபட்சமாக, கிலோ, 7 ரூபாய் என, விற்பனை செய்யப்படுகின்றன.

**கடும் நஷ்டம்:**இவ்வாறு நஷ்டம் ஏற்பட்டு உள்ளதால், இந்த பகுதி விவசாயிகள் அர” உதவியை எதிர்பார்க்கின்றனர். இதுகுறித்து, கே.ஜி.கண்டிகையை சேர்ந்த மா விவசாயி கிரி கூறியதாவது:நான், 100 ஏக்கர் நிலத்தில் மா மரங்கள் பயிர் செய்துள்ளேன். கடந்த ஆண்டு மாங்கனிகள் மூலமாக, 8 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்தது. இந்த ஆண்டு, உரம், பூச்சி மருந்து, தொழிலாளர் கூலி (காவல்) என, இதுவரை, 80 ஆயிரம் ரூபாய் செலவு செய்து உள்@ளன். சூறைக்காற்றில் மாம் பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன. உதிர்ந்த பிஞ்சுகளை கூலி ஆட்கள் வைத்து பொறுக்கி எடுத்து சந்தைக்கு அனுப்பி@னாம். அடிமாட்டு விலையாக, கிலோ நான்கு ரூபாய்க்கு தான் வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இதனால், எனக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் போது, வழங்குவது போன்று, எங்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

- நமது நிருபர் குழு –

## பர்மா தேக்கை சாகுபடிசெய்யும் பட்டதாரி வாலிபர்: ஊடு பயிராக வாழையும் சாகுபடி

காஞ்சிபுரம்:விவசாய நிலத்தில், பர்மா தேக்கை நடவு செய்து, பராமரித்து வருகிறார் காஞ்சிபுரத்தை சேர்ந்த பட்டதாரி வாலிபர்.காஞ்சிபுரம் அடுத்துள்ள முசரவாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் நந்தா, 27. பி.காம்., பட்டதாரி. இவ ருக்கு சொந்தமான 10 ஏக்கர் விளை நிலத்தில், நெல், வேர்கடலை, கேழ்வரகு உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களை சாகுபடி செய்து வருகிறார்.

இதுகுறித்த நந்தா கூறியதாவது:பர்மா தேக்கு கன்றுகளை, "இந்துஸ்தான் பையோ டெக்' நிறுவனத்தாரிடம் இருந்து வாங்கி வந்து நடவு செய்துள்ளேன். ஒரு செடியின் விலை 60 ரூபாய். கடந்த 2008ம் ஆண்டு, ஒவ்வொரு கன்றுக்கும் 6 அடி இடைவெளி விட்டு நடவு செய்தேன்.20 நாட்களுக்கு ஒரு முறை, தண்ணீர் பாய்ச்சுகிறேன். இவற்றை நடவு செய்தது முதல், 12 ஆண்டுகள் வரை பராமரிக்க வேண்டும். அவ்வப்போது இதில் உள்ள பக்க கிளைகளை அகற்ற வேண்டும். நான்கு ஆண்டுகளில், 30 அடி உயரம் கன்றுகள் வளர்ந்துள்ளன.

நாட்டு தேக்கு மரத்தை விட, இந்த பர்மா தேக்கு வீரியமாக வளர்கிறது. நடவு செய்தது முதல், 12வது ஆண்டில், மரமாகி விற்பனை செய்யும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துவிடும். ஒவ்வொரு மரமும் லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகும் என, எதிர்பார்க்கிறேன்.பர்மா தேக்கு கன்றுகள் நடவு செய்யப்பட்ட விவரத்தை, கிராம நிர்வாக அதிகாரிக்கும், வனத்துறை அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தேன்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது, நேரில் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்.தேக்கு கன்றுகளுக்கு இடையே வாழை கன்றுகளை, ஊடு பயிராக நடவு செய்துள்ளேன். அவையும் வீரியமாக வளர்ந்து வருகின்றன. 10வது மாதத்தில் பூவிட்டு காய்க்க கூடியவை. ஒரு தார், 150 ரூபாய் முதல், 200 ரூபாய் வரை விற்கலாம்.இவ்வாறு, நந்தா தெரிவித்தார்.

## கரும்பு நாற்றங்கால் உற்பத்தியில்... நவீனம் கரூர் கம்ப்யூட்டர் இன்ஜி., அசத்தல்

கரூர்: செம்மை சாகுபடியில் நவீன தொழில்நுட்பத்தின்படி, கரும்பு நாற்றங்கால் உற்பத்தி செய்து, கரூர் கம்ப்யூட்டர் இன்ஜினியர் விற்பனை செய்து வருகிறார்.தமிழகத்தில், 2.84 லட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு, மூன்று கோடி டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. பணப்பயிரான கரும்பிலிருந்து சர்க்கரை, வெல்லம், கந்தசாரி போன்ற இனிப்பு பொருட்கள் தயாரித்து பயன்படுத்தப்படுகிறது. மேலும் கரும்பு சக்கை எரிபொருட்கள் உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது.தற்போது பாரம்பரிய முறைபடி கரும்புகளை துண்டு, துண்டாக வெட்டி நடவு செய்வது நடைமுறையில் இருக்கிறது. இதற்கு ஏக்கருக்கு, நான்கு டன் கரும்பு தேவைப்படுகிறது. இதுமட்டுமல்லாது ஏக்கருக்கு, 40 மெட்ரிக் டன்னுக்கும் குறைவாக மகசூல் பெறுகின்றனர். நமது உற்பத்தியில், 10 சதவீத ம் கரும்பு விதைக்காக ஒது க்கி வைக்கப்படுகிறது. இதை தடுக்க மாற்றுவழியாக, கரும்பு கணுக்கள் மூலம் நாற்று உற்பத்தி செய்து, நடவு செய்யும் புதிய முறை செம்மை கரும்பு சாகுபடி கண்டறியப்பட்டுள்ளது.இந்த நவீன தொழில்நுட்பம் மூலம், கரூர் மாவட்டம், குளித்தலை அருகே கீழப்பட்டிச் சேர்ந்த கம்ப்யூட்டர் இன்ஜினியர் கரிகாலன்

கரும்பு நாற்றங்கால் உற்பத்தி செய்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறியதாவது:புதிய முறையில் நாற்று உற்பத்தி செய்ய "ஷேர்நெட்' அமைக்க வேண்டும். பின்னர் ஒரு விதைப்பருவை கரும்பில் இருந்து, அரைவட்ட வடிவில் வெட்டி எடுத்து, தரமான அச்சீவல்களை கொண்டு "பரோடிரே' எனப்படும் குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நார்கழிவை பயன்படுத்தி நாற்றங்கால் அமைக்கப்படுகிறது. இதன் மூலம் அதிகளவு முளைப்புத்திறனை, குறைந்த நாட்களில் அடைய முடிகிறது.நாற்றங்காலில் நாற்றுகள், 25 முதல், 30 நாட்கள், வயது அடைந்தவுடன், வேர்ப்பகுதியில் உள்ள தென்னை நார்கழிவுடன் சேர்த்து நடவு செய்ய வேண்டும். அச்சமயம், 4 முதல், 6 இலைகள் கொண்டவையாக இருக்கும்.செம்மை கரும்பு சாகுபடி முறையில் இளம் நாற்றுகளை எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளியில் நடவு செய்தல், குறைந்த அளவு மட்டும் நீர்பாய்ச்சினால் போதுமானது. தேவையான உரங்கள் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, ஊடுபயிர் சாகுபடி மூலம் மண்வளம் அதிகரிக்கிறது. மேலும் இந்த பயிரிகளில் கூடுதலாக நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதால், பூச்சிநோய் தாக்குதலுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்கிறது.இதன்படி ஒரு ஏக்கர் கரும்பு நடவு செய்ய, 50 கிலோ கரும்புகளில் உள்ள கணுக்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் நாற்றுக்களே போதுமானது. ஒரு நாற்றாங்கால், 1.25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வழக்கமான முறையில் சராசரியாக ஏக்கருக்கு, 40 முதல், 60 டன் கரும்பு மகசூல் கிடைக்கிறது என்றால், செம்மை கரும்பு சாகுபடியில் ஏக்கருக்கு, 60 முதல், 80 டன் வரை உற்பத்தி செய்யமுடிகிறது.மேலும் ஊடுபயிர்கள் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமான வழி உண்டு. இதைபோல முட்டைகோஸ், கீரை போன்ற பயிர்களுக்கு நாற்றங்கால் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.இவ்வாறு அவர் கூறினார்.நாற்றுக்களை கொண்டு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்துக்கொள்ள தோட்டக்கலைத் துறை மூலம், 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. அதேபோல நவீன இயந்திரங்களை பயன்படுத்தி களை எடுப்பது முதல், அறுவடை வரை, எளிதில் செய்ய முடியும். இதனால் கரும்பு அறுவடையில் மிகுந்த சிக்கலாக உள்ள கூலியாட்கள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கிறது.

## ரூ.34.88 லட்சத்திற்கு பட்டு கூடுகள் விற்பனை

சிவகங்கை : ""மாவட்டத்தில், 2012- 13ல் ரூ.34.88 லட்சத்திற்கு பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதென," பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் நடராஜன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:

சிவகங்கை, பட்டு தொழில் நுட்ப சேவை மையம் மூலம் சிவகங்கை, காளையார்கோவில், சிங்கம்புணரியில் மல்பரி விரிவாக்கப்பணிகள் நடக்கிறது. தற்போது, 53 விவசாயிகள், 93.50 ஏக்கரில் மல்பரி பயிரிட்டு புழு வளர்த்து வருகின்றனர். 2012-13ல் 16 ஆயிரத்து 800 பட்டு முட்டைகள் வளர்ந்து, 11 ஆயிரத்து 254 கிலோ பட்டு கூடுகள் உற்பத்தியானது. பட்டு கூடு

விற்பனை மூலம், 34.88 லட்ச ரூபாய் கிடைத்தது. மாவட்ட அளவில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டு கூடுகளை கொள்முதல் செய்திட, பட்டுக்கூடு அங்காடி மற்றும் நூற்பகம் செயல்பட்டு வருகிறது. 2012-13ல் 13 ஆயிரத்து 114 கிலோ கூடுகள் விற்பனை செய்து, 883 கிலோ பட்டு நூல்கள் உற்பத்தியானது, என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

22.04.2013 A.M

## சர்வதேச சந்தையில் விலை உயர்வு 50 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதியாக வாய்ப்பு



புதுடெல்லி : கடந்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தி அதிகரித்ததால், இந்திய உணவு கழக குடோன்கள் நிரம்பி வழிகின்றன. இதையடுத்து, கையிருப்பிலிருந்து கூடுதலாக 50 லட்சம் டன் கோதுமையை தனியார் நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு கடந்த மாதம் அனுமதித்தது. ஏல முறையில் ஒரு டன்னுக்கு ரூ.14,840 (274 அமெரிக்க டாலர்) என்ற அடிப்படை விலை மற்றும் 12.5 சதவீத வரியுடன் ஏற்றுமதி செய்ய முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்திய உணவு கழகத்தின் தலைவர் அமர்சிங் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: கோதுமை ஏற்றுமதிக்கான அடிப்படை விலையை குறைக்க வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது, கோதுமை டன்னுக்கு 304 முதல் 306 அமெரிக்க டாலர் என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அமெரிக்க கோதுமை டன்னுக்கு 270 டாலரிலும், ஆஸ்திரேலிய கோதுமை 260 டாலருக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இருந்தாலும், நாம் கோதுமை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

கடந்த ஒரு மாதமாக சர்வதேச சந்தையில் கோதுமை விலை இறங்குமுகமாக இருந்தது. இப்போது அதிகரித்து வருகிறது. டன்னுக்கு 300 டாலர் என்ற விலையில் தொடர்ந்து நீடித்தால் கோதுமை

ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளது. 50 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்வதற்கான டெண்டர் அடுத்த வாரம் விடப்படும். அதிக தொகைக்கு கேட்பவர்களுக்கு கோதுமை விற்கப்படும். இதன் மூலம் சேமிப்பில் உள்ள கோதுமையை காலி செய்வோம் என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

22.04.2013 A.M

## கொல்லிமலை பகுதியில் கொத்து, கொத்தாக தொங்கும் பலா பழங்கள் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

நாமக்கல்,

கொல்லிமலையில் கொத்து, கொத்தாக காய்த்து தொங்கும் பலா பழங்கள் சுற்றுலா பயணி களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளன.

தனிச்சிறப்பு

நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை தரைமட்டத்தில் இருந்து ஏறத்தாழ 1,500 மீட்டர் உயரம் கொண்டதாகும். இதன் உச் சிக்கு 70 கொண்டை ஊசிகளை கடந்து செல்ல வேண்டும்.

இந்த மலை மீது மூங்கில், தேக்கு, சந்தனம் என பல்வேறு வகையான மரங்கள் இருந் தாலும், இங்கு விளையும் பலா பழங்கள் மிகுந்த சுவை நிறைந்த தாக காணப்படுவதால், இவற் றிற்கு தனிச்சிறப்பு உண்டு.

கொத்து, கொத்தாக...

கொல்லிமலையில் மொத்தம் 14 ஊராட்சிகள் உள்ளன. இவற்றில் ஆலத்தூர் நாடு, குண்டனி நாடு, சித்தூர் நாடு, பெரக்கரை நாடு ஆகிய 4 ஊராட்சிகளிலும் அதிக அளவில் பலா மரங்கள் உள்ளன. இங்குள்ள பலா மரங்களில் சீசன் நேரங்களில் பலா பழங்கள் கொத்து, கொத்தாக காய்த்து தொங்கும்.

பொதுவாக ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பலா சீசன் களை கட்டும். பலா பழங்கள் பிஞ்சு பிடித்து, நல்ல திரட்சியான காயாக மாற ஏறத்தாழ 3 மாத காலங்கள் தேவைப்படும். எனவே ஜூன் மாதம் அறுவடை சீசன் தொடங்கினாலும், மார்ச் மாதமே பலா மரங்கள் காய்க்க தொடங்கி விட்டன. தற்போது பெரும்பாலான மரங்களில் பலா காய்கள் கொத்து, கொத்தாக தொங்குவதை

காண முடிகிறது. இவை இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

விவசாயிகள் கவலை

இந்த ஆண்டு நாமக்கல் மாவட்டம் முழுவதும் கடுமை யான வறட்சி நிலவி வருகிறது. கொல்லிமலையிலும் குறை வான அளவே மழை பெய்து உள்ளதால், கடந்த ஆண்டை ஒப்பிடும்போது பலா பழம் குறைவாகவே காய்த்து இருப்ப தாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

இங்கு விளையும் பலா பழங்கள் அறுவடை காலங்களில் தெம்பலம், சோளக்காடு, செங்கரை பகுதியில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்யப் படுகின்றன. இதேபோல் முள் ளுக்குறிச்சி மற்றும் தம்மம்பட்டி சந்தைகளுக்கும் விற்பனைக் காக மலைவாழ் மக்கள் தலை சுமையாக சுமந்து பலா பழங்களை கொண்டு வருவது உண்டு.

## மீனவர்களுக்கு வழங்கப்படுவதை போல விவசாயிகளுக்கும் வறட்சி கால உதவித் தொகை வழங்க வேண்டும் டி.ஆர்.பி.ராஜா எம்.எல்.ஏ.வலியுறுத்தல்

மன்னார்குடி,

மீனவர்களுக்கு வழங்கப் படுவதை போல விவசாய குடும்பங்களுக்கும் வறட்சி கால உதவித்தொகை வழங்க வேண்டும் என்று டி.ஆர்.பி.ராஜா எம்.எல்.ஏ. வலியுறுத்தி னார்.

இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது:-

வறட்சி

கடந்த ஆண்டு வறட்சி மற் றும் மின்வெட்டின் காரண மாக விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் பெரும் பொரு ளாதார இழப்பை சந்தித்தனர். விவசாய கூலி தொழிலாளர்கள் முற்றிலும் வேலையில்லாமல் முடங்கி விட்டனர். விவசா யிகளில் ஒருசிலர் தற்போது ஆங்காங்கே கோடைகால குறுவை சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக மும்முனை மின்சா ரம் கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வருகிறார்கள். தற் போது பெரும்பான்மையான நீர் நிலைகள் வறண்டு விட் டன. அவைகளை உடனடியாக தூர்வாரும் நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தினால் அவைகளின் கொள்ளளவு

வெகுவாக அதிகரித்து தண் ணீர் கிடைக்கும் போது கூடுத லாக தேக்கி வைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

மேட்டூர் அணை

ஜூன்-12 ந் தேதி மேட்டூர் தண்ணீரை திறக்க வேண்டு மென்றால், இப்போதிருந்தே அணையின் நீர் மட்டத்தை உயர்த்த துவங்குவது அவசி யம். இதை அரசு அதிகாரிகள் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.
ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாடினாலும், காவிரி யில் நீர் இல்லாமலும் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு சேர வேண்டிய நிவாரணத்தை முழுமையாக கொடுக்க வேண் டும். அதோடு மீனவ மக்க ளுக்கு மீன் பிடி தடை காலங் களில் வழங்கப்பட்டு வருகிற உதவித்தொகையை போல விவசாயம் பொய்த்துவிட்ட இந்த காலக்கட்டத்தில் ஒவ் வொரு விவசாய குடும்பத்திற் கும் மாதந்தோறும் வறட்சி கால உதவித்தொகையாக குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டு இருந்தது.

## மகசூல் குறைவு எதிரொலி: பச்சை தேயிலைக்கு மாத விலை ரூ. 20 நிர்ணயம்

குன்னூர்,

மகசூல் குறைவு எதி ரொலியாக பச்சை தேயிலைக்கு மாத விலை யாக ரூ.20 விலை நிர்ண யம் செய்யப்பட்டு உள் ளது.

சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவ சாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் காரணமாக நீலகிரி மாவட் டத்தின் பொருளாதார நிலையை தேயிலை விலையே நிர்ணயம் செய்து வந்தது.
கடந்த 1997-98-ம் ஆண்டு களில் நீலகிரி தேயிலை தூள் அதிகளவு ஏற்றுமதி ஆனதால் பச்சை தேயிலைக்கு ரூ.20 வரை விலை கிடைத்து வந்தது. ஆனால், கடந்த 2000-ம் ஆண்டு தொடக்கத்தில் பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இந்த விலை வீழ்ச்சி காரணத்தை கண்டறிந்த தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவியல் மையம் தேயிலை தரம் மேம்பாடு திட்டத்தை விவசாயிகளுக்கு அறிமுகம் படுத்தினர். இதன்படி தரமான பச்சை தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது.

தேயிலை மகசூல் குறைவு

தரம் மேம்பாடு திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு அடைந்த சிறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளையும் பச்சை தேயிலையை தரமுள்ள தாக அறுவடை செய்து வரு கின்றனர். இவ்வாறு அறு வடை செய்யும் பச்சை தேயிலைக்கு தேயிலை வாரி யம் அறிவுரையின் பேரில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சி' பிரிவு என்று தரம் நிர்ணயம் செய்யப்பட்டு விலை வழங்கப் பட்டு வருகிறது. பச்சை தேயிலைக்கு வழங் கப்படும் விலை வார விலை என்றும், மாத விலை என்றும் இரு விலையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, நீலகிரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி யின் காரணமாக தேயிலை மகசூல் பெருமளவில் குறை வடைந்து உள்ளது.

ரூ.20 விலை நிர்ணயம்

இதனால், தேயிலை தூள் உற்பத்தி பாதிக்கப்பட்டு ஏலம் மையத்திற்கு தேயிலை தூள் வரத்து குறைவடைந்து உள்ளது. இதன் காரணமாக தேயிலை தூளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதன் எதிரொலியாக பச்சை தேயிலைக்கும் விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது. கடந்த மார்ச் மாத விலையாக பச்சை தேயிலை 20 ரூபாய் 50 பைசா வழங்கப் பட்டது. தேயிலை வரத்து குறைவு காரணமாக வார விலையிலும் விலை உயர்வு காணப்படுகிறது.

தற்போது பச்சை தேயிலை யின் மகசூல் குறைவாக இருப்பதால் கடந்த 20-ந் தேதி சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 19 ரூபாயில் இருந்து 20 ரூபாய் வரை விலை கொடுக்கப் பட்டது. முதல் தர தேயிலைக்கு ரூ.25-ம், 2-ம் தர தேயிலைக்கு ரூ.22 முதல் ரூ.23 வரையிலும் விலை கொடுக்கப் பட்டது.

பச்சை தேயிலை விலை உயர்வு தொடர்ந்து இருக்குமா என்ற கேள்விக்குறி விவ சாயிகள் மத்தியில் எழுந்து வருகிறது. ஏனெனில் கடந்த 2 வார காலமாக ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை குறைவு ஏற்பட்டு வருகிறது. மகசூல் குறைவடைந்த நிலை யில் பச்சை தேயிலைக்கு விலை குறையுமானால் அது விவசாயிகளை கடும் பாதிப் பிற்குள்ளாக்கும் என்று சிறு விவசாயிகள் கருத்து தெரி விக்கின்றனர்.

## உதயநத்தம் ஊராட்சியில் உழவர் தினவிழா விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

தா.பழூர்,

உதயநத்தம் ஊராட்சியில் நடைபெற்ற உழவர் தின விழாவில் விவசாயி களுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கப் பட்டது.

உழவர் தின விழா

அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் தமிழக அரசின் சிறப்புத்திட்டமான உழவர் தின துவக்க விழா உதயநத்தம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு உதவி வேளாண் அலுவலர் செந்தில் குமார் வரவேற்றார். ஊராட்சி தலைவர் சின்னத்துரை விழாவினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் சிவக்குமார், விதை சான்ற ளிப்பு துறை அலுவலர் காசி நாதன், வேளாண் பொறி யியல்துறை இளநிலை பொறி யாளர் ரவிச்சந்திரன் ஆகி யோர் திட்டங்கள் குறித்து பேசினர்.

செய்முறை விளக்கம்

இந்நிகழ்ச்சியில் விவசாயி களுக்கு மண்மாதிரி எடுத்தல், எலி ஒழிப்பு செய்தல், கால் நடைமுகாம், அசோலா வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, தோட்டக்கலையில் குழி தட்டில் செடி வளர்ப்பு, விதை நேர்த்தி உள்ளிட்ட பல்வேறு அரசின் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் காண்பிக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் திருந்திய நெல் சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை ரூ.2 ஆயிரம் மதிப்பில் காசோலை 5 பேருக்கு வழங்கப் பட்டது. மற்றும் மானிய விலையில் விசைத்தெளிப்பான் கருவி மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்கப் பட்டது.

மருத்துவ முகாம்

தொடாந்து கால்நடை மருத்துவர் அறிவுச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமில் குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, நோய்தடுப்பூசி என கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலவலர் தமிழ் வாணன், சாந்தி, செந்தில் குமார், சோழமாதேவி கிரீடு வேளாண்மை அறிவியல் மையதிட்ட தொழில்நுட்ப வல்லுனர் ராஜா ஜோஸ்லின், துணை வேளாண்மை அலு வலர் சொக்கலிங்கம் ஆகி யோர் மண்மாதிரி குறித்து செய்முறை விளக்கமளித்த னர்.

இந்நிகழ்ச்சியில் அட்மா திட்ட அலுவலர்கள் சகா தேவன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா, சிவக் குமார், கலையரசன், ஜோதி, செந்தில்குமார், மற்றும் ஒன் றிய கவுன்சிலர் தவசீலன், ஊராட்சி துணை தலைவர் இளங்கோவன், ஊராட்சி செயலாளர் இளங்கோவன் உள்ளிட்ட பலர்

கலந்து கொண்டனர். வேளாண் விற்பனை மற்றும் வணிக அலுவலர் குமாரபாண்டியன் நன்றி கூறினார்.

## எலந்தலப்பட்டி ஊராட்சியில் தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்

பாடாலூர்,

எலந்தலப்பட்டி ஊராட்சியில் தோட்டக் கலைப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

விழிப்புணர்வு முகாம்

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டார தோட்டக் கலைத்துறை சார்பில் எலந்தலப்பட்டி ஊராட்சியில் தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.
விழிப்புணர்வு முகாமிற்கு தோட்டக் கலைத் துறை அலுவலர் மனோகரன் தலைமை தாங்கி பேசிய தாவது:-

தோட்டக்கலைத்துறை மூலம் அரசு வெங்காய விதை கள், எலுமிச்சை, கொய்யா மற்றும் மலர் கன்றுகள் மானிய விலையில் வழங்கப் பட்டு வருகிறது. மேலும், மினி டிராக்டர், கை மருந்து தெளிப் பான், மருந்து அடிக்கும் பவர் ஸ்பிரேயர், இயற்கை உரம் போன்றவை மானிய விலை யில் வழங்கப்பட்டு வருகிறது.

அதிக அளவில் லாபம்

இதுபோன்ற தோட்டக் கலைப் பயிர்கள் விவசாயிகள் அதிகளவில் பயிரி¢ட்டு அதிகளவில் லாபம் பெற லாம்.
விவசாயப் பயிர்களுக்கு அரசுத்துறையில் காπ¢ப்பீடு செய்து தரப்படுகிறது. இது போல் அரசுதரப்பில் வழங்கும் மானியங்களை விவசாயிகள் பெற¢று பயன்பெற வேண்டும்.

மரக்கன்றுகள் நட வேண்டும்

அதேபோல் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், கோடை காலங்களில் வெப்பத்தை குறைக்கவும், அதிகளவில் மழை பெறவும் விவசாயிகள் தங்கள் நிலங்களிலும், விவ சாயத்திற்கு பயன்படாத பகுதிகளிலும் மரக்கன்றுகளை அதிகளவில் நட்டு, அதனை முறையாக பராமரித்து வளர்க்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

முகாமில் எலந்தலப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் கீதாபாலு, துணைத் தலைவர் செல்வராஜ், விவசாய சங்க தலைவர் துரைராஜ், ஒன் றியக்குழு உறுப்பினர் ரமேஷ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கலியமூர்த்தி உள்ளிட்ட கிராம பொது மக்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## அரசின் திட்டங்களை பயன்படுத்த வேண்டியது விவசாயிகளின் கடமை வேளாண்மை அதிகாரி பேச்சு

அரிமளம்,

அரசின் திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டியது விவசாயி களின் கடமை என்று வேளாண்மை இணை இயக்குனர் எம்பெருமாள் கூறினார்.

உழவர் பெருவிழா

அரிமளம் ஒன்றியத்தை சேர்ந்த கும்மங்குடி ஊராட்சி தல்லாம்பட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது. நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் சாத்தையா, முன் னோடி விவசாயிகள் பெரிய கருப்பன், உரக்கடை காசி, ஊராட்சி துணை தலைவர் துரை, முன்னாள் ஊராட்சி துணை தலைவர் சுப்பையா ஆகியோர் முன் னிலை வகித்தனர். விழாவில் வேளாண்மை இணை இயக்குனர் எம்பெரு மாள், வேளாண் விற்பனை மற்றும் வணிகம் துணை இயக்குனர் அண்ணா மலை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இதில் வேளா ண்மை இணை இயக் குனர் பேசியதாவது;-

விவசாயிகளின் கடமை

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா சீரிய சிந்தனையில் உருவாகிய உன்னதமான திட்டம். அவர், விவசாய தொழில் நுட்பங்களையும், அரசின் மூலம் விவசாய துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றியும் மக்கள் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கிராமம், கிராமமாக வேளா ண்மை மற்றும் அதன் சார் புடைய துறையினரை அனு ப்பு, இது போன்ற விழாக் களை நடத்த உத்தரவிட்டு ள்ளார்.
அரசின் திட்டங்களை பயன் படுத்தி கொள்ள வேண்டியது விவசாயிகளின் கடமை. விவசாயிகள் இதுபோன்ற விழாக்களில் கலந்து கொண்டு பயன் அடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு உழவர் பெரு விழாவும் விவசாயிகளுக்கு பயன் உள்ளதாக அமையும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

குடல்புழு நீக்கம்

விழாவில் திருந்திய நெல் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப கருத்துகள் விவசாயிகளுக்கு எடுத்து கூறப்பட்டன. கோனவீடரை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. மேலும் விதைநேர்த்தி பற்றியும், மண் பரிசோதனை செய்வதின் அவசியம், மண்பரிசோதனை செய்ய எவ்வாறு மண்வெட்டி எடுக்க வேண்டும் என்பது குறித்து வேளா ண்மை அலுவலர் ஆண்டனி டேவிட், விதை சான்று அலுவலர் சக்திவேல் ஆகியோர் பேசினார்கள்.

விழாவில் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம் செய்யப் பட்டது. மேலும் மானிய விலையில் பேட்டரி கைத் தெளிப்பான், நெல் நுண் சத்து, விதை நேர்த்தி மருந்து கள் வழங்கப்பட்டன. தோட்டக் கலை துறை சார்பில் விவசாயி களுக்கு காய்கறி விதைகள் மற்றும் உழவர் பெருவிழாவுக் காக தயாரிக்கப்பட்ட கிட்டு கள் வழங்கப்பட்டன.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் வேளாண்மை அலுவலர்கள் ரபீக், கிருஷ்ண மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆதிமூலம், லோகநாதன், மணி, சண் முகம், கால்நடை டாக்டர் நிமலேசன், உதவி விதை அலுவலர் ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், சக்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் வரவேற்றார். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சி பகுதியில் சூறாவளி காற்றில் கரும்பு பயிர் சேதம்

கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி பகுதியில வீசிய சூளாவளி காற்றில் கரும்பு பயிர் சாய்ந்து சேதமடைந்தது.

சூறாவளி காற்று

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம் பகுதியில் கோடை வெயில் மக்களை வாட்டி வதைக்கிறது. மாநிலத் தில் பல மாவட்டங்களில் வெப்ப சலனத்தால் கோடை மழை பெய்யும் நிலையில் கள்ளக்குறிச்சி பகுதியில் மட்டும் மழையின்றி கடும் வறட்சி நிலவுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், கச்சிராயப்பாளையம், மூங்கில் துறைப்பட்டு பகுதியில் சூறாவளி காற்று வீசியது. பயங்கர சத்தத்துடன் இடி, மின்னலும் தாக்கியது. வீடுகளின் ஜன்னல் கதவுகள், மொட்டை மாடி குடிநீர் டேங்க் மூடிகள் சுழன்று வீசிய சூறாவளி காற்றில் டமார்... டமார்... மோதியது. சாலை களில் வைக்கப்பட்டிருந்த விளம்பர டிஜிட்டல் பேனர்கள், தட்டிகள் காற்றில் பறந்தது.

சங்கராபுரம் அருகே மோட்டாம்பட்டியை சேர்ந்த அயோத்தி என்பவரின் கூரை வீட்டில் மின்னால் தாக்கி தீப்பிடித்தது.

கரும்பு சேதம்

இதில் உர மூட்டைகள் எரிந்து நாச மானது. இதேபோல் அரசம் பட்டை சேர்ந்த கண்ணன் என்பவரின் வீட்டின் மேற்கூரை ஓடுகள் காற்றில் தூக்கி வீசப்பட்டது.

இந்த சூறாவளி காற்றில் கள்ளக்குறிச்சி, ஆலத்தூர், மூரார்பாளையம், சங்கரா புரம், எஸ்.வி.பாளையம், புதுப்பட்டு பகுதியில் பயிரிட் டுள்ள கரும்பு, வாழைகள் சாய்ந்தது. திடீரென்று தாக்கி சேதப்படுத்திய சூறாவளி காற்றால் கரும்பு விவசாயிகள் கவலை அடைந்தனர். பலத்த காற்று வீசியபோதும் மழை ஏமாற்றிச்சென்றது.

## எலுமிச்சம் பழங்களில் சிலந்தி தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண்மை அதிகாரி விளக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்,

எலுமிச்சம் பழங்களில் பழந்துருச்சிலந்தி தாக்கு தலை கட்டுப்படுத்துவது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

எலுமிச்சம் பழம்

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் அமலா பாலு ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

எலுமிச்சை சாகுபடி செய் துள்ள விவசாயிகள் கவன முடன் இருக்க வேண்டும். இவர்கள் எழுமிச்சம் பழங்கள் துருப்பிடித்து போன்று பழுப்பு நிறத்தில் உள்ளனவா? பழுப்பு நிறப்பகுதியை சுரண்டி பார்த்தால் உள்ளே பச்சையாக உள்ளதா? அவ்வாறு துருப் பிடித்தது போன்று உள்ள

பெரிய பழங்களில் உள்ள பழசான்றின் அளவும் ருசியும் மாற்றமும் இல்லையா என கவனிக்க வேண்டும்.

இதில் மாற்றம் இருப்பின் எலுமிச்சம் பழங்கள் பழச்துருச்சிலந்தியினால் பாதிக்கப்பட்டு இருக்கலாம். பழச்துருச்சிலந்தியினால் ஏற்பட்ட பாதிப்பினை வங்குநோவு என்றும் சில பகுதிகளில் அழைக்கிறார்கள். பழச்துருச்சிலந்தியை உருப்பெருக்கி கொண்டுதான் காண இயலும்.

பழுப்பு நிறமாக மாறும்

பழச்துருச் சிலந்தியின் இளம் பருவங்களும், முதிர்ந்த பருவங்களும் எலுமிச்சம் பிஞ்சு, காய் மற்றும் பழங்களின் மேல் தோலினை சுரண்டி சாறு உண்கின்றன. இதனால் மேல்தோல் திசுக்கள் காயந்து பழுப்பு நிறமாக மாறுகின்றன. இதனால் எலுமிச்சம் பழங்களுக்கே உரிய மங்களகரமான பொன்னிறமான மஞ்சள் நிறத்தினை இழப்பதால் குறைந்தவிலைக்கே போகி ன்றன. அதனால் எமுமிச்சை சாகுபடி யாளர்களின் வரு மானம் வெகுமாக பாதிக்கப் படுகிறது. ர்சூ ர்டெல்லா தாம்சோனி என்ற பூசணம் இயற்கையிலேயே கட்டுப்படுத்த வல்லது.

எனினும் சாதகமற்ற சூழ்நிலை களில் பழச் துருச் சிலந்தியின் அதிவேக பெருக் கத்தினை அப் பூசணத்தினால் கட்டுப் படுத்த முடிவதில்லை. பழச் துருச் சிலந்தி தாக்கு தலை கட்டுப்படுத்த காய்ப் பருவத்தில் சீரிய கண்காணிப்பு செய்ய வேண்டும். ஒரிரு பழங்கள் பாதிக்கப்பட்டு இருந் தால் அவற்றை உடனே அப்புறப்படுத்தி அழித்து விட வேண்டும். பாதிப்பு தீவிரப்பட்டால் டைக்கோ பால் ( வணிக பெயர் கெல்தேன், டெல்கோ பால் ) அல்லது நனையும் கந்தகம் என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை மட்டும் தெளிக்க வேண்டும். டைக்கோ பால் எனில் 100 லிட்டர் தண்ணீருக்கு 200 மில்லி மருந்து வீதம் சேர்த்து கொள்ள வேண்டும். நனையும் கந்தகம் எனில் 100 லிட்டர் தண்ணீருக்கு 300 கிராம் மருந்து வீதம் சேர்த்து கலக்கி கொள்ள வேண்டும்.

தெளிக்க வேண்டும்

மருந்துகரைசல் எலுமிச்சம் பிஞ்சு, காய் மற்றும் பழங்களின் மீது நன்கு பரவி படிவதற்காக சாண்டோவிட், இண்ட்ரான் போன்ற வேளாண்மைக்கான திரவ சோப்பு கரைசல்களில் ஏதேனும் ஒன்றினை 1 லிட்டர் தண்ணீருக்கு அரை மில்லி வீதம் சேர்த்து கலக்கி கொள்வது அவசியம். எலுமிச்சம் பிஞ்சு, காய் மற்றும் பழங்களின் மீது மட்டுமன்றி இலைகளின் மீதும் நன்கு படும் படியாக மருந்து கரைலை தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.